செய்தி வெளியீடு எண். 55-2017 நாள்: 22.08.2017

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு இட ஒதுக்கீட்டின்கீழ் 2017ஆம் ஆண்டுக்கு மாணவர் சேர்க்கைக்கான மூன்றாவது கலந்தாய்விற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

*****

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு இட ஒதுக்கீட்டின்கீழ் 2017ஆம் ஆண்டுக்கு மாணவர் சேர்க்கைக்கான இரண்டு கலந்தாய்வுகள் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், உளுந்தூர்பேட்டையில் 23.06.2017 முதல் 19.08.2017 வரை நடந்து முடிவுற்ற நிலையில் மீதமுள்ள காலியிடங்களுக்கான சேர்க்கைக்கு விழுப்புரம் மாவட்ட மூன்றாவது கலந்தாய்விற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. www.skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் 28.08.2017.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், உளுந்தூர்பேட்டையில் 10-ம் வகுப்பு கல்வித்தகுதிக்கு பொருத்துனர் (காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோர்) தொழிற்பிரிவு இயங்கி வருகிறது. மேற்கண்ட தொழிற்பிரிவிற்கு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

விண்ணப்பிக்கும் அனைவருக்கும் 28.08.2017-க்கு பிறகு கலந்தாய்வு நாள் மற்றும் நேரம் விண்ணபத்தில் உள்ளீடு செய்யப்பட்ட கைபேசி எண்ணுக்கு குறுந்தகவல் மூலம் அனுப்பப்படும். மேலும், www.skilltraining.tn.gov.in இணையதள முகவரியில் தங்களது விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியினை உள்ளீடு செய்து, தங்களுக்கான கலந்தாய்வு நாள் மற்றும் நேரத்தினை தெரிந்துகொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பிக்க கடைசி நாள். 28.08.2017 மற்றும் கலந்தாய்வு நாள். 30.08.2017

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.